முக்கிய வார்த்தைகள்:
உலகம்
படைப்பு / இயற்கை
பொறுப்புள்ள
மகத்துவம்

இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
13 நவம்பர் 2026 / 03 ஜமாதில் ஆகிர் ஹிஜிரி 1448

அல்லாஹ்வின் படைப்புகளில் காணப்படும் அத்தாட்சிகளில் சிந்தனை செய்தல்

الْحَمْدُ لِلّٰهِ الَّذِي يُسَبِّحُ لَهُ مَا فِي السَّمَاوَاتِ وَالْأَرْضِ، وَهُوَ الْعَزِيزُ الْحَكِيمُ. أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيلِ: يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱتَّقُواْ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ.

ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதன் மூலமாகவும், அல்லாஹ்வினால் விலக்கப்பட்டவற்றிலிருந்து விலகி இருப்பதன் மூலமாகவும், அல்லாஹ்வின் மீதான நமது "தக்வா" [பக்தியை] பலப்படுத்திக் கொள்வோமாக! அல்லாஹ்வை நமக்கு எப்போதும் நினைவூட்டி, அல்லாஹ்வின் **படைப்புகளில்** காணப்படும் அருட்கொடைகளைப் போற்றி, அவற்றின் அருமையை உணர்ந்து கொள்வதற்கு உதவும் புலன்களை அல்லாஹ் நமக்கு வழங்கி, அருளட்டுமாக!. ஆமீன், யா ரப்பல் ஆலமீன்.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

திறந்த வானத்தை உற்றுப் பார்த்தோ, பறவைகளின் கீச்சொலியைக் கேட்டோ, அல்லது இதமான தென்றலை உணர்ந்தோ, அல்லாஹ்வின் **மகத்துவத்தை** எண்ணிப் பிரமித்து, அல்லாஹ்வை நாம் போற்றுவது போல் எப்போதாவது நாம் உணர்ந்திருக்கிறோமா?

நம்மில் சிலர் தொழும்போதும், திருக்குர்ஆனை ஓதும்போதும், அல்லது மார்க்க உரைகளைக் கேட்கும்போதும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவை நினைவு கூர்கிறோம். ஆயினும், நம்மைச் சூழ்ந்துள்ள படைப்புகளும் அல்லாஹ்வின் **மகத்துவத்தைப்** பற்றிச் சிந்திக்க நமக்கு அழைப்பு விடுக்கவில்லையா? நாம் அவ்வாறு சிந்திக்கின்றோமா?

திருக்குர்ஆனின் "ஆலி-இம்ரான்" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 190-வது வசனத்தில் காணப்படும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் வார்த்தைகளில் சிந்தனை செய்வோமாக!

إِنَّ فِي خَلْقِ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضِ وَٱخْتِلَٰفِ ٱلَّيْلِ وَٱلنَّهَارِ لَءَايَٰتٍ لِّأُو۟لِى ٱلْأَلْبَٰبِ ﴿١٩٠﴾

பொருள்: *"நிச்சயமாக, வானங்கள், பூமி ஆகியவற்றின் **படைப்பிலும்**, இரவும், பகலும் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு [அல்லாஹ்வின் **மகிமையை** உணர்த்தும்] பல அத்தாட்சிகள் இருக்கின்றன"*

இவையெல்லாம், "ஆயாதுன் கௌனிய்யா" என்று அழைக்கப்படுகின்றன; அதாவது, அல்லாஹ்வின் படைப்புகளில் சிந்தனை செய்வதன் மூலம் நாம் கண்டறிய முடிகின்ற, அல்லாஹ்வின் ஆற்றல் மற்றும் **மகத்துவத்தின்** அடையாளங்களாக இருக்கின்றன. ஒவ்வொரு உயிரினமும், எல்லாம் வல்ல படைப்பாளனாகிய [அல்-காலிக்] அல்லாஹ்வின் மகத்துவத்திற்கு ஒரு சான்றாக விளங்குகின்றன.

அன்பான சகோதரர்களே!

நமது "ஈமான்" எனும் ஓரிறை நம்பிக்கையின் வழிகாட்டுதலுடன், **இயற்கை உலகத்துடனான** நமது உறவைக் குறித்த பின்வரும் மூன்று பாடங்களைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்ப்போமாக!

முதலாவதாக: படைப்புகள் அனைத்தும் அல்லாஹ்வைப் போற்றுகின்றன என்பதை நாம் உணர வேண்டும்.
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-இஸ்றா" எனும் அத்தியாயத்தின் 44-வது வசனத்தில் கூறுகிறான்:

وَإِن مِّن شَيْءٍ إِلَّا يُسَبِّحُ بِحَمْدِهِۦ وَلَٰكِن لَّا تَفْقَهُونَ تَسْبِيحَهُمْ

பொருள்: *"இன்னும் அவனின் [அல்லாஹ்வின்] புகழைக் கொண்டு துதி செய்யாத, புகழாத பொருள் **[படைப்பு]** எதுவும் இல்லை, எனினும் அவற்றின் புகழ் பாடுதலை நீங்கள் உணர்ந்து கொள்ள மாட்டீர்கள்"*

செழிப்பான மரங்களையும், ஓடும் ஆறுகளையும், மிகச்சிறிய **உயிரினங்களையும்** சிந்தித்துப் பாருங்கள். அவை அனைத்தும் நமது புரிதலுக்கு அப்பாற்பட்ட வழிகளில் தஸ்பீஹ் செய்து, அல்லாஹ்வைப் புகழ்கின்றன.

இந்த உணர்வுடன் நாம் இருக்கும் நிலையில், எப்படி நாம் அலட்சியமாக **இவ்வுலகிற்கு** அழிவை ஏற்படுத்த முடியும்? உண்மையில், இந்த **இயற்கையான உலகமாகிறது,** நாம் நமது நலனுக்குப் பயன்படுத்துவதற்கான ஒரு வளம் மட்டுமல்ல. இது அல்லாஹ்வைப் புகழ்ந்துரைக்கும் அவனது **படைப்பின்** ஒரு பகுதியாகவும் உள்ளது. அதைப் பாதுகாப்பது அவனது **படைப்பை** மதிப்பதாகும், அதேசமயம், அதை அழிப்பது என்பது அவனது **படைப்பின்** தொடர்ச்சியான தஸ்பீஹ் [அல்லாஹ்விற்கான அவற்றின் புகழ்ச்சிகளை] நாம் மௌனமாக்கித் தடுப்பதைப் போன்றதாகும்.

இரண்டாவதாக: சுற்றுச்சூழல் அழிவதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அர்ரூம்" எனும் அத்தியாயத்தின் 41-வது வசனத்தில் பின்வருமாறு நமக்கு நினைவூட்டுகிறான்:

ظَهَرَ ٱلْفَسَادُ فِى ٱلْبَرِّ وَٱلْبَحْرِ بِمَا كَسَبَتْ أَيْدِى ٱلنَّاسِ

பொருள்: *"மனிதர்களின் கைகள் செய்த [தீய செயல்களின்] காரணத்தால் கடலிலும் தரையிலும் [நாசமும்] குழப்பமும் தோன்றியுள்ளன"*

சகோதரர்களே! இன்று சுற்றுச்சூழலைப் பற்றிய நமது உரையாடல்களில், முதலாளித்துவம் மற்றும் விரைவான தொழில்நுட்ப முன்னேற்றங்கள் சுற்றுச்சூழலில் ஏற்படுத்தும் தீங்குகளின் பாதிப்புகளையேப் பெரும்பாலும் மையப்படுத்தி பேசப்படுகின்றன. ஆயினும், மேற்கண்ட வசனத்தைச் சிந்தித்துப் பார்க்கும்போது, சுற்றுச்சூழல் நெருக்கடியானது ஒரு ஆழமான ஆன்மீக நெருக்கடியையும் பிரதிபலிக்கக்கூடும் என்பது நமக்கு நினைவூட்டப்படுகிறது.

நம்மைச் சுற்றியுள்ள **உலகில்** காணப்படும் அல்லாஹ்வுடைய **மகத்துவத்தின்** அடையாளங்களை நாம் போற்றத் தவறும்போது, அவற்றின் அருமையை நாம் உணரத் தவறும் போது, சில சமயங்களில் கட்டுப்பாடின்றியும் கூட, சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் வாய்ப்பு நமக்கு அதிகமாகலாம்.

ஆகவே, சுற்றுச்சூழலைப் பேணுவதென்பது, நம்மை நாம் சுயபரிசோதனை செய்து கொள்வதிலிருந்து தொடங்குகிறது. நமது வாழ்க்கை முறைகள் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றியுணர்வைத் தெரிவிப்பதாக உள்ளனவா? அல்லது அவை வீணடிப்புக்கும் அழிவுக்கும் வழிவகுக்கின்றனவா? என நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக: பூமியின் கலீஃபாவாக [பிரதிநிதியாக] நமது பொறுப்பை நிறைவேற்றுதல்

உண்மையில், திருக்குர்ஆனின் "அல்-பகரா" எனும் அத்தியாயத்தின் 30 வது வசனத்தில், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, மனிதகுலத்தை கலீஃபாக்கள், அதாவது, பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதிகள், பூமியைப் பாதுகாக்கும் நிர்வாகிகள் என்று வர்ணிக்கிறான். இருப்பினும், நமக்கு வழங்கப்பட்டுள்ள இந்தப் பணியானது வெறும் ஒரு கௌரவப் பணி மட்டுமல்ல, அது நாம் நிறைவேற்றப் **பொறுப்பேற்றிருக்கும்** ஒரு அமானிதமாகும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நம்மில் ஒவ்வொருவரும், தத்தமது தகுதிக்கேற்ப ஒரு பாதுகாவலராக, எளிய மாற்றங்களுடன் தொடங்கலாம். வளங்களை வீணாக்குவதைத் தவிர்த்தல், தேவையற்ற செலவுகளைக் குறைத்தல், மற்றும் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலின்படி, தொழுகை போன்ற வணக்க வழிபாட்டிற்காக வுளூ செய்யும்போது கூட நீரைச் சேமிப்பது உட்பட, வளங்களைப் **பொறுப்புடன்** பயன்படுத்த முயற்சிக்கலாம்.

இந்தச் சிறிய முயற்சிகளை குறைத்து மதிப்பிட வேண்டாம். வருங்கால சந்ததியினரின் நலனுக்காக, அல்லாஹ் நம் மீது வைத்துள்ள நம்பிக்கையை நாம் உணர்ந்திருப்பதை நமது ஒவ்வொரு செயலும் பிரதிபலிக்க வேண்டும்.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!
நாம் வாழும் **இவ்வுலகம்**, நாம் வாழ்வதற்கான ஒரு இடம் மட்டுமல்ல. இது அல்லாஹ்வின் **மகத்துவத்தின்** அடையாளங்களால் நிறைந்துள்ள இடமாகும். நாம் அல்லாஹ்வின் **படைப்புகளில்** எவ்வளவு அதிகமாக சிந்திக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக அப்படைப்புகள் மீதான நமது **பொறுப்புணர்வும்** வளர வேண்டும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, அவனது **மகத்துவத்தின்** அடையாளங்களிலும், அத்தாட்சிகளிலும் கவனம் செலுத்தும் உள்ளங்களை

நமக்கு வழங்குவானாக. மேலும், அவனது அருட்கொடைகளைப் போற்றி, நமது பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள **படைப்புகளைப்** பாதுகாக்கும் நன்றியுள்ள அடியார்களாக நம்மை வழிநடத்துவானாக. ஆமீன், யா ரப்பல் ஆலமீன்.

أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.

இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ

عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.